உ

கணபதி துணை.

சிதம்பரம் பச்சைக்கந்தையர் மடத்துச்

சென்னமல்லையர் அருளிச்செய்த

சிவசிவவெண்பாவும்,

திருவாவடுதுறைச்

சிவஞானசுவாமிகள் அருளிச்செய்த

சோமேசர்

முதுமொழிவெண்பாவும்.

இவை

சிதம்பரம்

அ. இரத்நசபாபதிமுதலியாரால்

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

சர்வசித்து ௵ மார்கழிமீ

(Copyright Reserved)

உ

கணபதி துணை.

சிவசிவவெண்பாவும்,

சோமேசர்

முதுமொழிவெண்பாவும்.

காப்பு.

தெள்ளுலகீ திசிவசிவாவென் றுதிரு
வள்ளுவர்வெண்பாவால்வழுத்துறவெற்—குள்ள துணை
கந்தனிபிராருணைகமேவியகருணைத்
தந்திமுகன்செய்பதுடைத்தாள்.

மாதுவளரும்பூஞ்சடிலமல்குசோமேசர்
முதுமொழிவெண்பாவைமொழியப்—பொதுளு
மடம்பிடுங்கியன்பர்க்குவான்வீடளிக்குங்
கடம்பொழிமுக்கட்களிறு.

அவையடக்கம்.

சிவசிவாவெண்பாரிச்செய்யுட்டிறந்தேர்ந்
தேவர்களுமென்றஞ்சாதிசைத்தேன்—கவிஞரியற்
பல்பாலுரைத்தபழமொழிமுன்னீதுமொரு
வெண்பாநூலாய்விளங்கவே.

கடவுள்வாழ்த்து.

விற்பிரம்பாலுற்றவடுமேவவல்லசெங்குறை
சிற்பரனேதெய்வஞ்சிவசிவா—சொற்சிறந்த
அகரமுதலவெழுத்தெல்லாமாதி
பகவன்முதற்றேயுலகு. ([illegible]

சீர்கொளிறையொன்றுண்டத்தெய்வமீயென்றோட்பாற்
சேர்விலடையாற்றெளிந்தோஞ்சோமேசா—வோரில்
அகரமுதலவெழுத்தெல்லாமாதி
பகவன்முதற்றேயுலகு. (௧)

வான்சிறப்பு.

மலகொணேரியற்கும்பூவையர்க்குப்பூமழைசெய
திமைமாலநகண்டோஞ்சிவசிவா—பூமுற்
கெடுப்பதூஉங்கெட்டார்க்குச்சார்வாய்மற்றாங்கே
யெடுப்பதூஉமெல்லாமழை. (௨)

நேயபுகழ்த்துணையார்நீராட்டுங்கைகளாற்குன்
றாயமுடிமேல்வீழ்ந்தார்சோமேசா—வாயுங்கால்
தானந்தவமிரண்டுந்தங்காவியனுலகம்
வானம்வழங்காதெனின். (௩)

நீத்தார்பெருமை

நல்லசுகருக்கன்பிதாவானதென்வேதமுனி
செல்லமடவராகியசிவா—சொல்லி
னூமென்னனுக்கேட்டியாஞ்ஞைந்துங்காட்டான
வைரமென்னனும்மையப்புக்கோவித்து. (௪)

அத்திரவாக்காற்புத்தன்சென்னியறுத்தார்சண்டைச்
சுத்தனார்தம்மன்பர்சோமேசா—நித்த
நிறைமொழிமாந்தர்பெருமைநிலத்து
மறைமொழிகாட்டிவிடும். (௫)

அறன்வலியுறுத்தல்.

எய்தருமம்பாலுயிர்க்கீத்தெய்துபொழுதுங்கன்னன்
செய்தருமமீந்தான்சிவசிவா—வெய்யநெறி
யன்றறிவாமென்னாதறஞ்செய்கமற்றது
பொன்றுங்காற்பொன்றாத்துணை. (௯)

தக்கனார்வேள்வித்தவத்தைமேற்கொண்டிருந்துந்
தொக்கவறமாயிற்றோசோமேசா—மிக்க
அழுக்காறவாவெகுளியின்னாச்சொனான்கு
மிழுக்காவியன்றதறம். (௰)

இல்வாழ்க்கை.

எய்துசவுபரிக்கன்றின்றமகளாமையனைந்
செய்யவாசிந்தான்சிவசிவா—துய்யதவத்
தாற்றினொழுக்கியாநிழுக்காவில்வாழ்க்கை
நோற்பாரினோன்மையுடைத்து. (௱)

இல்வாழ்த்தருமணியற்சத்திபசேனன்
றொல்வாழ்க்கைதாழ்ப்படுத்தான்சோமேசா—நல்ல
இயல்பினானில்வாழ்க்கைவாழ்பவனென்பான்
முயல்வாருளெல்லாந்தலை. (௱)

வாழ்க்கைத்துணைநலம்.

சத்தியந்தப்பாவரிச்சந்திரற்குச்சந்திரமதி
சித்தமொருமித்தாள்சிவசிவா—புத்தியுடன்
தற்காத்துத்தற்கொண்டாற்பேணித்தகைசான்ற
சொற்காத்துச்சோர்விலாள்பெண். (௬)

மூவர்தமைப்பவுங்கொண்மூவைப்பணிகொண்டா
ளேவனசூயைசோமேசா—மேவுபிற
தெய்வந்தொழாஅள்கொழுநற்றொழுதெழுவாள்
பெய்யெனப்பெய்யுமழை. (௬)

புதல்வரைப்பெறுதல்.

மறலிசெயன்மாற்றிவயதாறூற்பெற்ற
இறன்மகப்பேறுஞ்சிவசிவா—பெறுபே
றெழுபிறப்புந்தீயவைதீண்டாபழிபிறங்காப்
பண்புடைமக்கட்பெறின். (௭)

பாடினர்மூவாண்டினிற்சம்பந்தரெனயாவோருஞ்
சூடுமகிழ்ச்சிமெய்யேசோமேசா—நாடியிடில்
தம்மிற்றம்மக்களறிவுடைமைமாநிலத்து
மன்னுயிர்க்கெல்லாமினிது. (௭)

அன்புடைமை.

வேந்துரையாற்பூசைபுரிவேடன்மனைவெந்துமுன்போற்
சேர்ந்துபணிசெய்தாள்சிவசிவா—வோர்ந்தவிடத்
தன்பின்வழியதுயிர்நிலையஃதிலார்க்
கென்புதோல்போர்த்தவுடம்பு. (௮)

தோன்றுவகைகரந்துந்தோன்றலைக்கண்டென்னெகிழ்ந்து
தோன்றநின்றான்முன்புநளன்சோமேசா—தோன்றுகின்ற
அன்பிற்குமுண்டோவடைக்குந்தாழார்வலர்
புன்கணீர்பூசறரும். (௮)

விருந்தோம்பல்.

அன்னமிடான்பொன்றொடைந்துந்தனதுடலைத்
தின்னவேதின்றான்சிவசிவா—மன்னியயற்
செல்விருந்தோம்பிவருவிருந்துபார்த்திருப்பா
னல்விருந்துவானத்தவர்க்கு. (௯)

பொன்னனையாளன்பருக்கேபோனகமீந்துன்னருளாற்
சொன்னமிகப்பெற்றாளேசோமேசா—பன்னில்
வருவிருந்துவைகலுமோம்புவான்வாழ்க்கை
பருவந்துபாழ்படுதலின்று. (௯)

இனியவைகூறல்.

குன்றெடுத்தானின்சொற்கொகெருணைவாரிதியைச்
சென்றெடுத்தின்புற்றான்சிவசிவா—கன்றெடுத்த
வின்சொலினிதீன்றல்காண்பானெவன்கொலோ
வன்சொல்வழங்குவது. (௧௦)

இன்சொலிராமனியம்பவிரேணுகைசேய்
துன்பமொழியேபுகன்றான்சோமேசா—வன்புடைய
இன்சொலினிதீன்றல்காண்பானெவன்கொலோ
வன்சொல்வழங்குவது. (௧௦)

செய்ந்நன்றியறிதல்.

புடணம்போல்வீடணன்மேற்போனவேலேற்றநன்றி
தேட்முடியாதேசிவசிவா—நாடியெதிர்
செய்யாமற்செய்தவுதவிக்குவையகமும்
வானகமுமாற்றலரிது. (௧௧)

பன்னுபசதிநன்றிபாராட்டிக்கோவைநூல்
சொன்னனேயெளவைமுன்புசோமேசா—பன்னூத்
தினைத்துணைநன்றிசெயினும்பனைத்துணையாக்
கொள்வர்பயன்றெரிவார். (௧௧)

நடுவுநிலைமை.

நங்கையுமைசொல்லானவிகந்தயால்வெருவு
செங்கணரவானான்சிவசிவா—வெங்குஞ்
சமன்செய்துசீர்தூக்குங்கோல்போலமைந்தொருபாற்
கோடாமைசான்றோர்க்கணி. (௧௨)

வேதியனானாமோவென்றெள்ளாதுவெண்ணெய்நல்லூர்ச்
சோதிவழக்கேபுகழ்ந்தார்சோமேசா—மேவாதிற்
சமன்செய்துசீர்தூக்குங்கோல்போலமைந்தொருபாற்
கோடாமைசான்றோர்க்கணி. (௧௨)

அடக்கமுடைமை.

இறைமுருகன்முன்னின் றிசைத்தமொழிதேரான்
சிறையிருந்தான்முன்சிவசிவா—புறவுறுப்பின்
யாகாவாராயினுநாகாக்ககாவாக்காற்
சோகாப்பர்சொல்லிழுக்குப்பட்டு. (௧௩)

எல்லாமுணர்ந்தும்வியாதனியம்பியவச்
சொல்லாலேநாவயர்ந்தான்சோமேசா—வல்லமையால்
யாகாவாராயினுநாகாக்ககாவாக்காற்
சோகாப்பர்சொல்லிழுக்குப்பட்டு. (௧௩)

ஒழுக்கமுடைமை.

தன்மதுரைசொன்னபழிக்கஞ்சித்தகவுரைத்தான்
றென்மதுரைநாதன்சிவசிவா—வென்னி
லொழுக்கமுடையவர்க்கொல்லாவேதீய
வழுக்கியும்வாயாற்சொலல். (௧௪)

தியனவேசொல்லுஞ்சிசுபாலன்முன்புகண்ணன்
றூயதலாச்சொல்லுரையான்சோமேசா—வாயின்
ஒழுக்கமுடையவர்க்கொல்லாவேதீய
வழுக்கியும்வாயாற்சொலல். (௧௪)

பிறனில்விழையாமை.

வரமிழந்தான்சீதையினல்வாழ்விழந்தான்பத்துச்
சிரமுமிழந்தான்சிவசிவா—வரமா
யெனைத்துணையராயினுமென்னாந்தினைத்துணையுந்
தேரான்பிறனில்புகல். (௧௫)

ஆன்றவெழிற்சீதையைவேட்டைந்நான்குதிண்கரத்தான்
றோன்றுபழிமாறிலனேசோமேசா—வேன்ற
பகைபாவமச்சம்பழியெனநான்கு
மிகவாவாமில்லிறப்பான்கண். (௧௫)

பொறையுடைமை.

ஐவரினுமூன்றோனரசவையிலேபொறுத்த
செய்கைபெரிதன்றோசிவசிவா—வையத்
தொறுத்தாரையொன்றாகவையாரேவைப்பர்
பொறுத்தாரைப்பொன்போற்பொதிந்து. (கசு)

ஒட்டலன்செய்தீமைக்கொறுத்தகமரென்றுரைத்தா
சுட்டியசீரமெய்ப்பொருளார்சோமேசா—முட்ட
வொறுத்தார்க்கொருநாளையின்பம்பொறுத்தார்க்குப்
பொன்றுந்துணையும்புகழ். (கசு)

அழுக்காறாமை.

பேருவுடனிகலிவிர்தமலைவீழ்ந்து
சேருநிலனூடேசிவசிவா—வோரி
னழுக்காறெனவொருபாவிதிருச்செற்றுத்
தீயுழியுய்த்துவிடும். (கஎ)

அன்பரைக்கண்டழுக்காறுஞ்சமணர்தம்வாயாற்
றுன்பமுற்றாரெண்கழுவிற்சோமேசா—வன்பாம்
அழுக்காறுடையார்க்கதுசாலுமொன்னா
ரழுக்கியுங்கேடீனது. (கஎ)

வெஃகாமை.

வாசவனோராதைகொளவந்தபலனையிர்தத்
தேசமறியாதோசிவசிவா—பேசுங்காற்
சிற்றின்பம்வெஃகியறனல்லசெய்யாரே
மற்றின்பம்வேண்டுபவர். (கஅ)

நின்னபிடேகப்பழத்தைநீண்மறையோர்க்கீந்தவிறை
தன்னுகுடியோடழிந்தான்சோமேசா—பன்னில
நடுவின்றிநன்பொருள்வெஃகிற்குடிபொன்றிக்
குற்றமுமாங்கேதரும். (கஅ)

புறங்கூறாமை.

குந்திமகார்பேறுரைத்தகொற்றவனூர்தன்வரவுஞ்
சிந்தைசெயலுற்றான்சிவசிவா—நிந்தை
பிறன்பழிகூறுவான்றன்பழியுள்ளுந்
திறந்தெரிந்துகூறப்படும். (௧௯)

கூனியிராமன்பிரிந்துபோமாறேகூறினளே
தூநறும்பூங்கொன்றையணிசோமேசா—தானே
பகச்சொல்லிக்கேளிர்ப்பிரிப்பர்நகச்சொல்லி
நட்பாடறேற்றாதவர். (௧௯)

பயனிலசொல்லாமை.

மன்னவையிற்சொன்னவசையாற்சிசுபாலன்
இன்னமுற்றானன்றேசிவசிவா—வென்னிற்
பயனில்சொற்பாராட்டுவானைமகனெனல்
மக்கட்பதடியெனல். (௨௰)

சேக்கிழார்சிந்தாமணிப்பயிற்சிதீதெனவே
தூக்கியுபதேசித்தார்சோமேசா—நோக்கிற்
பயனில்சொற்பாராட்டுவானைமகனெனல்
மக்கட்பதடியெனல். (௨௰)

தீவினையச்சம்.

பாரமுடிபத்தும்பறித்தபழிசேதுவினிற்
றீருதவினாலேசிவசிவா—சாருமிகத்
தீயவைதீயபயத்தலாற்றீயவை
தீயினுமஞ்சப்படும். (௨௧)

குற்றொருவர்க்கூறைகொண்டுகொன்றதிம்மையேகூடச்
சொற்றதுகைகண்டோமேசோமேசா—வற்றான்
மறந்தும்பிறன்கேடுசூழற்கசூழி
னறஞ்சூழுஞ்சூழ்ந்தவன்கேடு. (௨௧)

ஒப்புரவறிதல்.

தாயைத்தடிகவென்றதந்தைமொழிதவறாச்
சேயைப்போலுண்டோசிவசிவா—வாயுமிடத்
தொத்ததறிவானுயிர்வாழ்வான்மற்றையான்
செத்தாருள்வைக்கப்படும். (௨௨)

பண்டைநிலைவெண்ணிகொத்தார்பாகஞ்செய்மாறரான்
தொண்டர்மனைவியார்சோமேசா—கண்டோ
நயனுடையானல்கூர்ந்தானாதல்செயுநீர
செய்யாதமைகலாவாறு. (௨௨)

ஈகை.

தந்தைக்கிளமைதரும்பூருவைநிகர்வார்
சிந்திக்கினெங்கேசிவசிவா—நிந்தித்
திலனென்னுமெவ்வமுரையாமையீதல்
குலனுடையான்கண்ணேயுள. (௨௩)

யீனென்றுரைப்பளவுமிக்குவகைபெற்றிலர்வண்
ரோளரியற்பகையார்சோமேசா—வீருலகில்
இன்னாதிரக்கப்படுதலிரந்தவ
ரின்முகங்காணுமளவு. (௨௪)

புகழ்.

ஓடிவருபுட்கன்றுடலையரிந்தீந்தபுகழ்
தேடவரிதேசிவசிவா—நாடிவரி
னீதலிசைபடவாழ்தலதுவல்ல
தூதியமில்லையுயிர்க்கு. (௨௫)

போசன்கவிஞருக்கேபோதப்பரிந்தளித்துத்
தூசிலாக்கீர்த்திகொண்டான்சோமேசா—வாசையுடன்
ஈதலிசைபடவாழ்தலதுவல்ல
தூதியமில்லையுயிர்க்கு (௨௬)

அருளுடைமை.

அன்றுமகப்பெறுவாட்கன்னைவடிவாகியரன்
சென்றுதுணைசெய்தான்சிவசிவா—வென்று
மருட்செல்வஞ்செல்வத்துட்செல்வம்பொருட்செல்வம்
பூரியார்கண்ணுமுள. (௨௫)

மூர்த்திபால்வன்கண்மைமூண்டவடுகேரசன்
சூர்த்திறந்தானுய்ந்தானேசோமேசா—கூர்த்த
பொருளற்றார்பூப்பரொருகாலருளற்றா
ரற்றார்மற்றாதலரிது. (௨௫)

புலான்மறுத்தல்.

புன்புலானுண்ணாதுபுள்ளடைந்தான்கறிவார்
இன்பரோடின்னார்சிவசிவா—துன்புறாஉந்
தன்னூன்பெருக்கற்குத்தான்பிறிதூனுண்பா
னெங்ஙனமாளுமருள். (௨௬)

மச்சங்கமந்துய்ப்பவானோர்ப்பணிகொண்டான்
றச்சனுஞ்சூரபன்மன்சோமேசா—நிச்சயமே
தன்னூன்பெருக்கற்குத்தான்பிறிதூனுண்பா
னெங்ஙனமாளுமருள். (௨௬)

தவம்.

ஆடும்பரிசேவலானைடற்சூரன்
றேடுந்தவத்தாற்சிவசிவா—நாடுங்கால்
வேண்டியவேண்டியாங்கெய்தலாற்செய்தவ
மீண்டுமுயலப்படும். (௨௭)

எர்மணநல்லூர்ச்சுடருள்யாருமணுகச்சிலர்தாந்
தூரநெறிநின்றயர்ந்தார்சோமேசா—வோரில்
தவமுந்தவமுடையார்க்காகுமவமதனை
யஃதிலார்மேற்கொள்வது. (௨௭)

கூடாவொழுக்கம்.

அட்டோர னூணிட்டாக்கன் பழிக்கரசைத்
தெட்டிவழி கொண்டான் சிவசிவா—கிட்டினர்க்குப்
பற்றற்றே மென்பார் படிற்றொழுக்க மெற்றெற்றென்
றேதம் பலவுந் தரும். (உ௭)

மாயனவ் வேடங்கொண்டே வஞ்சலந்தரன் கிழத்தி
தூய நலங்கவர்ந்தான் சோமேசா—வாயின்
வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று. (உ௮)

கள்ளாமை.

இல்வலன்வா தாவிகபடே தாயதுமலயச்
செல்வமுனி நோக்காற் சிவசிவா—சொல்லிற்
களவினா லாகிய வாக்க மளவிறந்
தாவதும் போலக் கெடும். (உ௯)

நாய்வாற் களவினன் ஞாலமிகழப் பட்டான்
நாயனுங் காதிமகன் சோமேசா—வாயதனால்
எள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத்தொன்றுங்
கள்ளாமை காக்கதன் னெஞ்சு. (உ௯)

வாய்மை.

பொங்குபுகழ் வாய்மைப் பணிந்தௌவையார்க் கரசன்
செங்கனியை யீந்தான் சிவசிவா—துங்க
மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை. (௩௦)

பிள்ளையுட னுண்ணப் பேசியமைந் தரான்பு
துன்னுசிறுத் தொண்டர் சோமேசா—வுள்ளுங்காற்
பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின். (௩௦)

வெகுளாமை.

தாவுசினத்தாற்றலையிழந்தான்றக்கனுமா
தேவிமகளாயுஞ்சிவசிவா—வாவன்மிகுந்
தன்னைத்தான்காக்கிற்சினங்காக்ககாவாக்காற்
றன்னையேகொல்லுஞ்சினம். (௩.௧)

பல்லவர்கோன்வந்துபணியக்கருணைசெய்தார்
தொல்லைநெறிவாகீசர்சோமேசா—கொல்ல
இணரெரிதோய்வன்னவின்னாசெயினும்
புணரின்வெகுளாமைநன்று. (௩.௧)

இன்னாசெய்யாமை.

புறம்பியத்துமின்னையுயிர்போக்கவந்தான்பட்ட
இறந்தெரியாதோசிவசிவா—பிறழ்ந்து
பிறர்க்கின்னாமுற்பகற்செய்யிற்றமக்கின்னா
பிற்பகற்றாமேவரும். (௩.௨)

பிள்ளையார்வைப்பிணிற்றீப்பெய்வித்தமினவன்றீத்
துன்றுவெப்புநோயுழந்தான்சோமேசா—வெள்ளிப்
பிறர்க்கின்னாமுற்பகற்செய்யிற்றமக்கின்னா
பிற்பகற்றாமேவரும். (௩.௨)

கொல்லாமை.

மேவும்வணசாரணோர்வேதியனைக்காத்தநலந்
தேவனறிவானேசிவசிவா—பூவுலகிற்
றன்னுயிர்நீப்பினுஞ்செய்யற்கதான்பிறி
இன்னுயிர்நீக்கும்வினை. (௩.௩)

வேந்துமகற்றேர்க்கால்விடலஞ்சிமந்திரிதான்
சேர்ந்துதனதாவிவிட்டான்சோமேசா— வாய்ந்துணர்ந்தோர்
தன்னுயிர்நீப்பினுஞ்செய்யற்கதான்பிறி
இன்னுயிர்நீக்கும்வினை. (௩.௩)

நிலையாமை.

எங்குமிறவானிறந்ததொருதானின்ற
சிங்கத்தாலன்றோசிவசிவா—தங்கிநிலை
நில்லாதவற்றைநிலையினவென்றுணரும்
புல்லறிவாண்மைகடை. (க௨)

ஆக்கையுமாயிரத்தெட்டண்டங்களுநிலையாத்
தாக்கையழித்தான்சூரன்சோமேசா—நோக்கியிடில்
நில்லாதவற்றைநிலையினவென்றுணரும்
புல்லறிவாண்மைகடை. (க௩)

துறவு.

பத்ரகிரியாரர்வசப்பட்டபனைப்பட்டதொரு
சித்ரகதையன்றோசிவசிவா—வொத்துத்
தலைப்பட்டார்தீரத்துறந்தார்மயங்கி
வலைப்பட்டார்மற்றையவர். (க௪)

கோவணமொன்றிச்சிப்பக்கூடினவேபந்தமெல்லாந்
தூயனைஞ்சோமேனியாய்சோமேசா—மேவில்
இயல்பாகுநோன்பிற்கொன்றின்மையுடைமை
மயலாகுமற்றும்பெயர்த்து. (க௫)

மெய்யுணர்தல்.

சொற்சுவைசேர்வாசகத்திற்சொன்னபொருள்தென்றே
சிற்சபையேபோனார்சிவசிவா—நற்கலைநூற்
கற்றீண்டுமெய்ப்பொருள்கண்டார்தலைப்படுவர்
மற்றீண்டுவாராநெறி. (க௬)

காரிகையாரைப்பொன்னைக்காட்டவுங்காமாதிமும்மைச்
சோர்விழந்துய்ந்தாரரசர்சோமேசா—வோருங்காற்
காமம்வெகுளிமயக்கமிவைமூன்ற
னாமங்கெடக்கெடுநோய். (க௭)

அவாவறுத்தல்.

சாரங்கமீதுசடபரதன்சிந்தைவைத்துச்
சீரங்கம்பெற்றான்சிவசிவா—நேரு
மவாவென்பவெல்லாவுயிர்க்குமெஞ்ஞான்றுந்
தவாஅப்பிறப்பீனும்வித்து. (௩௭)

தாய்கருவில்வாழ்குழவிதாமெல்லாம்வேண்டுவது
தூயபிறவாமையொன்றேசோமேசா—வாயதனால்
வேண்டுங்கால்வேண்டும்பிறவாமைமற்றது
வேண்டாமைவேண்டவரும். (௩௭)

ஊழ்.

உற்றாளைப்பெட்டகத்திட்டோட்டுமிலங்கேசனைப்பின்
செற்றாள்வந்தென்பார்சிவசிவா—வுற்றோரி
னூழிற்பெருவலியாவுளமற்றொன்று
சூழினுந்தான்முந்துறும். (௩௮)

முன்னரமண்மதத்துமூண்டரசர்பின்சைவந்
துன்னியதுமென்வியப்போசோமேசா—வுன்னுங்காற்
பேதைப்படுக்குமிழவூழறிவகற்று
மாகலூழுற்றக்கடை. (௩௮)

இறைமாட்சி.

பெற்றவைக்கென்போலிரண்டுபேரிலொருவன்பிழைத்தாற்
சிற்றவைக்காமென்றான்சிவசிவா—வுற்ற
முறைசெய்துகாப்பாற்றுமன்னவன்மக்கட்
கிறையென்றுவைக்கப்படும். (௩௯)

பார்சீதைசிலம்பழித்துரைத்துங்காகுத்தன்
சோர்வுறமுன்சீறிலனேசோமேசா—தேரிற்
செவிகைப்பச்சொற்பொறுக்கும்பண்புடைவேந்தன்
கவிகைக்கீழ்த்தங்குமுலகு. (௩௯)

கல்வி.

பார்க்கவன்பாற்கல்விபயின்றகயன்பார்க்கவனோய்
தீர்க்கவரம்பெற்றான்சிவசிவா—வேற்கநன்றாக்
கற்கசடறக்கற்பவைகற்றபி
னிற்கவதற்குத்தக. (௩0)

சம்பந்தர்நாவரசர்பாற்கண்டோஞ்சார்ந்துவப்ப
தும்பிரிவினுள்ளுவதுஞ்சோமேசா—நம்பி
உவப்பத்தலைக்கூடியுள்ளப்பிரித
லனைத்தேபுலவர்தொழில். (௩0)

கல்லாமை.

புததர்மிகவாதுபுகன்றதுபோய்வாதவூர்ச்
சித்தர்முனேதானார்சிவசிவா—வொத்தநெறி
கல்லாதவருநனிநல்லர்கற்றார்முற்
சொல்லாதிருக்கப்பெறின். (௩௧)

மெய்த்ததிருவள் ளுவனார்வென் றுயர்ந்தார்கல்விநலங்
துய்த்தசங்கத்தார்தாழ்ந்தார்சோமேசா—வுய்த்தறியின
மேற்பிறந்தாராயினுங்கல்லாதார்கீழ்ப்பிறந்துங்
கற்றாரனைத்திலர்பாடு. (௩௧)

கேள்வி.

வெய்யமரப்பேருரைத்தவேடனும்வான்மிகியெனுந்
தெய்வமுனியானான சிவசிவா—துய்ய
செவியுணர்விற்கேள்வியுடையாரவியுணவி
னான்றாரோடொப்பர்நிலத்து. (௩௨)

ஊனுக்கூனென்னுமுரைகண்டுவந்தனரே
தூநற்சீர்க்கண்ணப்பர்சோமேசா—வானதனாற்
கற்றிலனாயினுங்கேட்கவஃதொருவற்
கொற்கத்தினூற்றாந்துணை. (௩௨)

அறிவுண்டைமை.

சனகனுலகநெறிதாவாதஞான
தினகரனானன்சிவசிவா—மனதினுட
னெவ்வதுறைவதுலகமுலகத்தோ
டவ்வதுறைவதறிவு. (௪௩)

அன்றமணர்திவைப்பவஞ்சியதென்னென்னன்மின்
றுன்றியசீர்ச்சம்பந்தர்சோமேசா—நன்றேயாம்
அஞ்சுவதஞ்சாமைபேதைமையஞ்சுவ
தஞ்சலறிவார்தொழில். (௪௩)

குற்றங்கடிதல்.

தன்மகனுன்கன்றினுக்குந்தான்மந்திரிக்குமென்முன்
சென்மமன்றேசென்மஞ்சிவசிவா—வுன்னுங்காற்
றன்குற்றநீக்கிப்பிறர்குற்றங்காண்கிற்பி
னென்குற்றமாகுமிறைக்கு. (௪௪)

ஈரைந்தலையானனுகியபின்னேகலுற்றுச்
சூரந்தொலைந்தானேசோமேசா—வோரின்
வருமுன்னர்க்காவாதான்வாழ்க்கையெரிமுன்னர்
வைத்தூறுபோலக்கெடும். (௪௪)

பெரியாரைத்துணைக்கோடல்.

வன்றொண்டர்சேரரையும்வாவென்றரனழைப்பச்
சென்றுதெரிவித்தார்சிவசிவா—வென்றுமென்றுந்
தம்மிற்பெரியார்தமராவொழுகுதல்
வன்மையுளெல்லாந்தலை. (௪௫)

எத்திறமுமேயர்கோனட்பாமாறெண்ணினரே
சுத்தநெறியாரூரர்சோமேசா—வைத்த
அரியவற்றுளெல்லாமரிதேபெரியாரைப்
பேணித்தமராக்கொளல். (௪௫)

சிற்றினஞ்சேராமை.

அறியவசமோகலைக்கோட்டந்தணனுமாதர்
செறியவசத்தன்சிவசிவா—பிறிதென்
மனநலமன்னுயிர்க்காக்கமினநல
மெல்லாப்புகழுந்தரும். (௬௫)

அற்காவமண்மொழிகேட்டல்லலுற்றான்மாறனில்லாள்
சொற்கேட்டுநோய்தீர்ந்தான்சோமேசா—தற்காக்கும்
நல்லினத்தி னூங்குந் துணையில்லைதீயினத்தி
னல்லற்படுப்பதூஉமில். (௬௬)

தெரிந்துசெயல்வகை.

பன்மறையோர்க்கானளித்தபாரரசன்கோம்பியெனுஞ்
சென்மமெடுத்தான்சிவசிவா—வுன்னின்மிகு
நன்றாற்றலுள்ளுந்தவறுண்டவரவர்
பண்பறிந்தாற்றாக்கடை. (௬௭)

சானகியையிச்சித்துத்தன்னுயிரும்போக்கினனே
தூநிரிலங்கையர்கோன்சோமேசா—வானதனால்
ஆக்கங்கருதிமுதலிழக்குஞ்செய்வினை
யூக்காரறிவுடையார். (௬௭)

வலியறிதல்.

நீசவுருவங்கலனுடிரிசங்கு
தேசிகனாற்பெற்றான்சிவசிவா—பேசின்
வினைவலியுந்தன்வலியுமாற்றான்வலியுந்
துணைவலியுந்தூக்கிச்செயல். (௬௮)

சக்கரத்தையேற்பன்சலந்தரனென்றெடுத்துத்
துக்கமுற்றுவீடினனேசோமேசா—வொக்கும்
உடைத்தம்வலியறியாருக்கத்தி னூக்கி
யிடைக்கண்முரிந்தார்பலர். (௬௯)

காலமறிதல்.

யோகிருந்தகாலமுணராதுறுமதனன்
றேகமிழந்தான்சிவசிவா—வாகி
லருவினையென்பவுளவோகருவியாற்
காலமறிந்துசெயின். (சக)

வீமனவைமுன்மனையைவேட்டானைக்கண்டுமொரு
தூமொழியேனும்புகலான்சோமேசா—வாமென்றே
ஊக்கமுடையானொடுக்கம்பொருதகர்
தாக்கற்குப்பேருந்தகைத்து. (சக)

இடனறிதல.

வயத்திரதமேறிவருமபிமன்றன்னைச்
செயத்திரதன்கொன்றான்சிவசிவா—முயற்சியுட
னெண்ணியாரெண்ணமிழப்பரிடனறிந்து
துன்னியார்துன்னிச்செயின். (ரு௦)

காட்டுமுயலுங்கதக்கரியைக்கொல்லுமாற்
றோட்டலர்நீர்க்கச்சியினுட்சோமேசா—நாட்டியிடின
ஆற்றாருமாற்றியடுபவிடனறிந்து
போற்றார்கட்போற்றிச்செயின். (ரு௦)

தெரிந்துதெளிதல.

அத்தனபதத்தியற்றுமாழிசலந்தரனைச்
சித்ரவதைசெய்தசிவசிவா—தத்தம்
பெருமைக்குமேனைச்சிறுமைக்குந்தத்தங
கருமமேகட்டளைக்கல். (ருக)

தேராருமானந்தனைமுன்றேறிப்பழிபூண்டான்
சூரியபன்மாவெனபான்சோமேசா—தாரணிமேல்
தேரான்பிறனைத்தெளிந்தான்வழிமுறை
திராவிடும்பைதரும். (ருக)

தெரிந்துவினையாடல்.

சதமுகனைராகவனுஞ்சானகியைக்கொண்டே
சிதையவதைத்தான்சிவசிவா—விதயத்
திதனையிதனுலிவன்முடிக்குமென்ருய்ந்
ததனையவன்கண்விடல். (௫௨)

தேசிகனைக்கொண்டசுரரிறைக்குத்தீங்கிழைத்தான்
றாசார்துவட்டாச்சேய்சோமேசா—பேசில்
எனைவகையாற்றேறியக்கண்ணும்வினைவகையான்
வேருகுமாந்தர்பலர். (௫௨)

சுற்றந்தழால்.

அன்றுதமருள்ளமறிந்தடைந்தவீடணற்குச்
சென்றுறுதிசொன்ஞன்சிவசிவா—வொன்று
முழைப்பிரிந்துகாரணத்தின்வந்தானைவேந்த
னிழைத்திருந்தெண்ணிக்கொளல். (௫௩)

ஆர்வீடணனோடளவளாவாதரக்கன்
சோர்விலாவாழ்விழந்தான்சோமேசா—நேரே
அளவளாவில்லாதான்வாழ்க்கைகுளவளாக்
கோடின்றிநீர்நிறைந்தற்று. (௫௩)

பொச்சாவாமை.

இப்புவிமேற்கோயிலிறந்ததயனுர்மறந்து
செப்புதலாலன்றேசிவசிவா—வெப்பொழுதும்
பொச்சாப்புக்கொல்லும்புகழையறிவினை
நிச்சநிரப்புக்கொன்ருங்கு. (௫௪)

முப்புரத்தோர்வேவவுடனிருந்தமூவரே
துப்பினுற்கண்டறிந்தார்சோமேசா—வெப்பால்
இகழ்ச்சியிற்கெட்டாரையுள்ளுகதாந்தம்
மகிழ்ச்சியின்மைந்துறும்போழ்து. (௫௪)

செங்கோன்மை.

மங்காதமங்குறனைமாறன்விலங்கிட்டான்
செங்கோன்மகிமைசிவசிவா—வெங்கேனும்
வேலன்றுவென்றிதருவதுமன்னவன்
கோலதூஉங்கோடாதெனின். (௫௫)

மைந்தனெனுமலசமஞ்சன்றனைவெறுத்தான்
சுந்தரச்செங்கோற்சகரன்சோமேசா—மூந்துங்
குடிபுறங்காத்தோம்பிக்குற்றங்கடிதல்
வடுவன்றுவேந்தன்றொழில். (௫௫)

கொடுங்கோன்மை.

தாதைசிறையிருக்கத்தங்கையழக்கஞ்சனுறுங்
தீதையெவர்சொல்வார்சிவசிவா—மேதினியி
லல்லற்பட்டாற்றாதழுதகண்ணீரன்றே
செல்வத்தைத்தேய்க்கும்படை. (௫௬)

ஐவரில்லாளழுதவன்றேகண்டேக்குற்றார்
துய்யகங்கைசேய்முதலோர்சோமேசா—மெய்யேயாம்
அல்லற்பட்டாற்றாதழுதகண்ணீரன்றே
செல்வத்தைத்தேய்க்கும்படை. (௫௬)

வெருவந்தசெய்யாமை.

வண்ணமகளைவருகீசகன்மடிந்தான்
திண்ணமிதுவன்றோசிவசிவா—வெண்ணின்
வெருவந்தசெய்தொழுகும்வெங்கோலனாயி
னொருவந்தமொல்லைக்கெடும். (௫௭)

வெய்துரையாலக்கணமே*வீந்தான்சிசுபாலன்
றொய்யின்முலையுமைபாற்சோமேசா—வுய்யாக்
கடுஞ்சொல்லன்கண்ணிலனாயினெடுஞ்செல்வ
நீடின்றியாங்கேகெடும். (௫௭)

கண்ணோட்டம்

முப்புரத்தைநீறாக்கிமூவரையுங்காத்தநலஞ்
செப்பமுடியாதேசிவசிவா—வொப்பிற்
கருமஞ்சிதையாமற்கண்ணோடவல்லாற்
குரிமையுடைத்திவவுலகு. (௫௮)

மாலான்முதலிகழ்ந்தவானவர்நீங்கும்பொறுத்துத்
தோலாவிடமுண்டாய்சோமேசா—சால
ஒறுத்தாற்றும்பண்பினார்கண்ணுங்கண்ணோடிப்
பொறுத்தாற்றும்பண்பேதலை. (௫௮)

ஒற்றாடல்.

வந்தசுகசாரர்வடிவைநிருதனன்றிச்
சிந்தைசெய்தார்காண்பார்சிவசிவா—பந்தர்
துறந்தாரபடிவத்தராகியிறந்தாராய்ந்
தென்செயினுஞ்சோர்விலதொற்று. (௫௯)

வேதனில்லாள்வீந்ததிறமீனவற்குநீதெரித்தாய்
சோதிபழியஞ்சுஞ்சோமேசா—பூதலத்தின்
எல்லார்க்குமெல்லாநிகழ்பவையெஞ்ஞான்றும்
வல்லறிதல்வேந்தன்றொழில். (௫௯)

ஊக்கமுடைமை.

நல்லதினமென்றேநகரகனிறுநாளுலகிற்
செல்லவரம்பெற்றான்சிவசிவா—வல்லமைசே
ருள்ளமிலாதவரெய்தாருலகத்து
வள்ளியமென்னுஞ்செருக்கு. (௬0)

வெங்கரியைப்பாகரைமுன்வீட்டினாரேகராய்த்
துங்கவெறிபததர்சோமேசா—வங்கம்
பரியதுகூர்ங்கோட்டதாயினும்யானை
வெரூஉம்புலிதாக்குறின். (௬0)

மடியின்மை.

தந்தையுளநோக்கித்தவமேவியதுருவன்
சிந்தைவலிதன்றேசிவசிவா—நந்து
மடியிலாமன்னவனெய்துமடியளந்தான்
றாஅயதெல்லாமொருங்கு. (சுக)

பொன்மலையின்வேங்கைபொறித்துமீண்டான்சென்னி
தொன்மைவலியாண்மையினாற்சோமேசா—பன்னின்
மடியிலாமன்னவனெய்துமடியளந்தான்
றாஅயதெல்லாமொருங்கு. (சுக)

ஆள்வினையுடைமை.

எய்தாதிராமற்கிலக்குவன்போலென்றுரைக்கச்
செய்தானடிமைசிவசிவா—நொய்தேனு
மின்பம்விழையான்வினைவிழைவான்றன்கேளிர்
துன்பந்துடைத்தூன்றுந்தூண். (சுஉ)

கூற்றுவர்மூவேந்தர்நிலமுங்கைக்கொண்டாரே
தோற்றுந்தாளாண்மையினாற்சோமேசா—சாற்று
முயற்சிதிருவினையாக்குமுயற்றின்மை
யின்மைபுகுத்திவிடும். (சுஉ)

இடுக்கணழியாமை.

இரணியன்றன்செய்தவிடும்பைதனைமைந்தன்
றிரணமாக்கண்டான்சிவசிவா—முரணி
யடுக்கிவரினுமழிவிலானுற்ற
விடுக்கணிடுக்கட்படும். (சுங)

என்றுமொருமீனேவந்தின்மைமிகவுந்தளரார்
துன்றேரதிபத்தர்சோமேசா—மன்ற
அடுக்கிவரினுமழிவிலானுற்ற
விடுக்கணிடுக்கட்படும். (சுங)

அமைச்சு.

போயவரசாளிபுகவெழக்கண்டாளியுடல்
நீயினமைச்சிட்டான்சிவசிவா—வாயிற்
றெரிதலுந்தேர்ந்துசெயலுமொருதலையாச்
சொல்லலும்வல்லதமைச்சு. (௬௪)

கால்சேய்கதிர்சேயைக்காத்தரசனட்புதவித்
தூலமுடிசூட்டுவித்தான்சோமேசா—சாலப்
பிரித்தலும்பேணிக்கொளலும்பிரிந்தார்ப்
பொருத்தலும்வல்லதமைச்சு. (௬௪)

சொல்வன்மை.

என்றும்பதினாறெனவரனாரோதியசொல்
சென்றதேயின்றுஞ்சிவசிவா—நன்றிபெறச்
சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து. (௬௫)

நித்தியத்து[illegible]கேட்பானித்திரையென்றேமயக்கந்
துய்த்தனனாங்கும்பகன்னன்சோமேசா—வெத்திறத்தும்
ஆக்கமுங்கேடுமதனால்வருதலாற்
காத்தோம்பல்சொல்லின்கட்சோர்வு. (௬௫)

வினைத்தூய்மை.

மைந்தன்முடிவீழ்த்தான்மாள்கவெனக்கைவிரித்த
சிந்துபதிபட்டான்சிவசிவா—தந்தஞ்
சலத்தாற்பொருள்செய்தேமாற்றல்பசுமட்
கலத்துணீர்பெய்திரீஇயற்று. (௬௬)

தக்கனுனையெள்ளிமகஞ்சாடும்போதெண்ணியெண்ணித்
துக்கமுற்றானவதென்னேசோமேசா—வெக்காலும்
எற்றென்றிரங்குவசெய்யற்கசெய்வானேல்
மற்றன்னசெய்யாமைநன்று. (௬௬)

வினைத்திட்பம்.

எய்துமுருவறிந்துமேந்திழையாள்பாவனைதான்
செய்தபடியாச்சேசிவசிவா—வையத்தி
னெண்ணியவெண்ணியாங்கெய்துபவெண்ணியார்
திண்ணியராகப்பெறின். (௬௭)

செவ்வேளைப்பாலனெனவெள்ளித்திறலழிந்தான்
றுவவாதவெஞ்சூரன்சோமேசா—வவ்வா
றுருவுகண்டெள்ளாமைவேண்டுமுருள்பெருந்தேர்க்
கச்சாணியன்னாருடைத்து. (௬௭)

வினைசெயல்வகை.

மங்கைமுலைக்கச்சவிழ்த்தமாயச்சயந்தனொரு
செங்கணிழந்தான்சிவசிவா—வெங்கு
முடிவுமிடையூறுமுற்றியாங்கெய்தும்
படுபயனும்பார்த்துச்செயல். (௬௮)

வெள்ளிவெற்பையெண்ணாதெடுப்பனெனவீறெய்தித்
துள்ளியழிந்தானரக்கன்சோமேசா—மெள்ள
முடிவுமிடையூறுமுற்றியாங்கெய்தும்
படுபயனும்பார்த்துச்செயல். (௬௮)

தூது.

சானகியைக்கண்டரக்கன்றுணிகவிவாலிலிடுந்
தீநகரிலிட்டான்சிவசிவா—வூனுக்
கிறுதிபயப்பினுமெஞ்சாதிறைவர்க்
குறுதிபயப்பதாந்தூது. (௬௯)

தன்றுயரநோக்கான்றனைவிடுத்தோர்க்கேயுறுதி
துன்றமொழிந்தானிடதன்சோமேசா—வென்றும்
இறுதிபயப்பினுமெஞ்சாதிறைவற்
குறுதிபயப்பதாந்தூது. (௬௯)

மன்னரைச்சேர்ந்தொழுகல்.

அன்றரசோடேரண்டனுமுறையாலவமே
சென்றுயிரையீர்தான்சிவசிவா—நன்றிபெற
வேட்பனசொல்லிவினையிலவெஞ்ஞான்றுங்
கேட்பினுஞ்சொல்லாவிடல். (௭௦)

மாமனுனென்னுமதத்தாலுனையிகழ்ந்து
தோமுற்றார்தக்கனார்சோமேசா—வாமே
பழையமெனக்கருதிப்பண்பல்லசெய்யுங்
கெழுதகைமைகேடுதரும். (௭௦)

குறிப்பறிதல்.

வென்றியிராமனெடுவில்லைமுனிவன்குறிப்பாற்
சென்றுவளைத்தான்சிவசிவா—மன்றிற்
குறிப்பிற்குறிப்புணர்வாரையுறுப்பினுள்
யாதுகொடுத்துங்கொளல். (௭௧)

அப்பூதியார்மறைத்தும்வாகீசரக்கரவைத்
துப்பானறிந்தனரேசோமேசா—விப்புவியில்
ஐயப்படாஅதகத்ததுணர்வானைத்
தெய்வத்தோடொப்பக்கொளல். (௭௧)

அவையறிதல்.

மன்றிற்பரசமயகோளரிமுன்வல்லமணர்
சென்றநிலையென்னாஞ்சிவசிவா—துன்றுதுற
வாற்றினிலைதளர்ந்தற்றேவியன்புல
மேற்றுணர்வார்முன்னரிழுக்கு. (௭௨)

ஓர்சங்கத்தார்கல்வியூமைச்சேய்க்குக்காட்டிச்
சேர்வுநலந்தேர்ந்தனரேசோமேசா—வோருங்காற்
கற்றறிந்தார்கல்விவிளங்குங்கசடறச்
சொற்றெரிதல்வல்லாரகத்து. (௭௨)

அவையஞ்சாமை.

முத்தமிழ்ச்சங்கத்தவரைமூதுரையால்வள்ளுவருஞ்
சித்தமகிழ்வித்தார்சிவசிவா—வெத்தனையுங்
கற்றாரிற்கற்றாரெனப்படுவர்கற்றார்முற்
கற்றசெலச்சொல்லுவார். (எக)

வாழ்வாதவூரர்வளவனவைமுன்னெதிர்த்துச்
சூழ்தேரரைவென்றார்சோமேசா—தாழ்வகல
ஆற்றினளவறிந்துகற்கவவையஞ்சா
மாற்றங்கொடுத்தற்பொருட்டு. (எங)

நாடு.

பொன்னியெனவேழுமுனிபொற்கரகநீர்கவிழ்த்த
சென்னிவளநாடேசிவசிவா—நன்று
டிருபுனலும்வாய்ந்தமலையும்வருபுனலும்
வல்லரணுநாட்டிற்குறுப்பு. (எச)

மேல்வளமெல்லாமமைந்தும்வீரமகேந்திரந்தான்
ஏல்வியுற்றுமாய்ந்ததேசோமேசா—ஞாலமிசை
ஆங்கமைவெய்தியக்கண்ணும்பயமின்றே
வேந்தமைவில்லாதநாடு. (எச)

அரண்.

காத்தானசலக்கருணாகரன்கலிங்கஞ்
சேர்த்தான்றிறத்திற்சிவசிவா—பார்த்தா
லெனைமாட்சித்தாயினுமென்றும்வினைமாட்சி
யில்லார்கணில்லாதரண். (எரு)

வல்லதிகன்றன்னரணம்வான்வளவன்சேனைசெலத்
தொல்லைவலிமாண்டதேசோமேசா—நல்ல
எனைமாட்சித்தாகியக்கண்ணும்வினைமாட்சி
யில்லார்கணில்லாதரண். (எரு)

பொருள்செயல்வகை.

கொண்டான்வடகிரியிற்கூடலரசபொருட்
செண்டாலடித்தேசிவசிவா—கண்டாயி
லொண்பொருள்காழ்ப்பவியற்றியார்க்கெண்பொரு
ளேனையிரண்டுமொருங்கு. (எசு)

உக்கிரனூர்மேருவைவென்றெண்ணிதியம்பெற்றமையாற்
றெக்ககுடிகாத்தனர்காண்சோமேசா—மிக்குயர்ந்த
குன்றேறியானைப்போர்கண்டற்றாற்றன்கைத்தொன்
றுண்டாகச்செய்வான்வினை. (எசா)

படைமாட்சி.

பார்த்திவனைக்கட்டவிழ்த்துப்பத்ராயுவன்பகையைத்
தீர்த்தொருவனின்றான்சிவசிவா—பார்த்தங்
கொலித்தக்காலென்னுமுவரியெலிப்பகைக்
நாகமுயிர்ப்பக்கெடும். (எஎ)

நீநகைப்பமும்புரமுநீறாகிமாய்ந்ததே
தூநகையாள்பாலமருஞ்சோமேசா—வானின்
ஒலித்தக்காலென்னுமுவரியெலிப்பகை
நாகமுயிர்ப்பக்கெடும். (எஎ)

படைச்செருக்கு.

உரமிறந்துபோகாதவுள்ளத்தரவான்
சிரமறுந்துற்றான்சிவசிவா—தரமா
விழுப்புண்படாதநாளெல்லாம்வழுக்கினுள்
வைக்குந்தன்னாளையெடுத்து. (எஅ)

மன்மதனின்னேடெதிர்த்துவீறழிந்துமாண்டாலுந்
துன்னுபுகழேபெற்றான்சோமேசா—புன்னெருங்குங்
கானமுயலெய்தவம்பினில்யானை
பிழைத்தவேலேந்தலினிது. (எஅ)

நட்பு.

உற்றகுசேலனலமுற்றிருத்தற்காவுவந்தோர்
சிற்றுணவுட்கொண்டான்சிவசிவா—சுற்று
முடுக்கையிழந்தவன்கைபோலவாங்கே
யிடுக்கண்களைவதாநட்பு. (எக)

வாக்கரசர்பிள்ளாயெனவலித்துமாற்றலுற்றார்
தூக்குபிள்ளையார்செலவைச்சோமேசா—நோக்கி
நகுதற்பொருட்டன்றுநட்டன்மிகுதிக்கண்
மேற்சென்றிடித்தற்பொருட்டு. (எக)

நட்பாராய்தல்.

துருவதன்கட்டுண்டான்றுரோணனடியாராற்
செருவினின்முனஞ்சிவசிவா—வருவதன்மு
னுய்ந்தாய்ந்துகொள்ளாதான்கேண்மைகடைமுறை
தான்சாந்துயரந்தரும். (அo)

போற்றுஞ்சுசீலன்புயபெலனைநீத்தகன்றான்
றேற்றிறைவிதும்பிடவுஞ்சோமேசா—வேற்றதே
ஊதியமென்பதொருவற்குப்பேதையார்
கேண்மையொரீஇவிடல். (அo)

பழமை.

குறித்தரசுகன்னனுடன்கோதைவிளையாடத்
தெறித்தமணியுஞ்சிவசிவா—பொறுக்கி
னழிவந்தசெய்யினுமன்பறாரன்பின்
வழிவந்தகேண்மையவர். (அக)

இல்லாளைப்பற்றிமூழ்கென்றிடவுமன்புகுன்றார்
தொல்லைநெறிநீலகண்டர்சோமேசா—வொல்லா
தழிவந்தசெய்யினுமன்பறாரன்பின்
வழிவந்தகேண்மையவர். (அக)

தீநட்பு

பொன்மானென்றாசைகொண்டபொன்னனையாள் பட்டதுயர்
சென்மாந்த்ரபாவஞ்சிவ்சிவா—சொன்னேங்
கனவினுமின்னாதுமன்னோவினைவேறு
சோல்வேறுபட்டார்தொடர்பு. (அ௨)

ஆங்காரியந்தடுத்தவங்கனைசொற்கேட்டிறந்தான்
றாங்காத்தசரதன்றான்சோமேசா—வீங்கிதனால்
ஒல்லுங்கருமமுடற்றுபவர்கேண்மை
சொல்லாடார்சோரவிடல். (அ௨)

கூடாநட்பு.

தாய்போல்வருமலகைதன்னட்பறிந்துமவள்
சேய்போலிருந்தான்சிவசிவா—மாயனெதிர்
நட்டார்போனல்லவைசொல்லினுமொட்டார்சொ
லொல்லையுணரப்படும். (அ௩)

தாய்திண்டத்தூசுடுத்துச்சாரெனுஞ்சொற்றீதென்றா
யேசுயோதனற்குச்சோமேசா—வாயதனால்
நட்டார்போனல்லவைசொல்லினுமொட்டார்சொ
லொல்லையுணரப்படும். (அ௩)

பேதைமை.

தன்றலைமேற்றன்கைவைத்தோர்தானவன்முன்பெற்றவரஞ்
சென்றிறக்கலாச்சேசிவசிவா—வென்றென்றும்
பொய்படுமொன்றோபுனைபூணுங்கையறியாப்
பேதைவினைமேற்கொளின். (அச)

வன்சமணர்தம்பிரிவால்வாகீசர்க்கின்பமன்றித்
துன்பமென்பதில்லையேசோமேசா—நன்காம்
பெரிதினிதுபேதையார்கேண்மைபிரிவின்கட்
பீழைதருவதொன்றில். (அ௫)

புல்லறிவாண்மை.

மாற்குமதுவுங்கைடவனும்வாழ்நாளைத்
தீர்க்கவரமீந்தான்சிவசிவா—பார்க்கி
னறிவிலானெஞ்சுவந்தீதல்பிறிதியாது
மில்லைபெறுவான்றவம். (அ௫)

இல்லாண்மறுப்பவுஞ்சென்றேகிச்சலந்தரன்றன்
றொல்வலிபோய்மாண்டனனேசோமேசா—வல்லமையால்
ஏவவுஞ்செய்கலான்றான்றேறானவ்வுயிர்
போஒமளவுமோர்நோய். (அ௫)

இகல்.

தாயடிமைவானமுதந்தந்தகற்றச்சார்வயின
தேயனைமால்வென்றான்சிவசிவா—வேய
விகலெதிர்சாய்ந்தொழுகவல்லாரையாரே
மிகலூக்குந்தன்மையவர். (அசு)

எத்திறத்துங்கெட்டாணிகலாற்சுயோதனன்சீர்
துய்த்தனனட்பாற்றருமன்சோமேசா—மொய்த்த
இகலானுமின்னாதவெல்லாநகலானு
நன்னயமென்னுஞ்செருக்கு. (அசு)

பகைமாட்சி.

ஐங்கரனென்றோராவரக்கன்றலைமோதிச்
செங்கரங்கொணந்தான்சிவசிவா—துங்க
வழிநோக்கான்வாய்ப்பனசெய்யான்பழிநோக்கான்
பண்பிலன்பற்றார்க்கினிது. (அஎ)

ஏனையர்பால்வெற்றிகொண்டானின்றேடெதிர்த்திறந்தான
ஆறுநும்பூவாளியான்சோமேசா—மான
வலியார்க்குமாறேற்றலோம்புகவோம்பா
மெலியார்மேன்மேகபகை. (அஎ)

பகைத்திறந்தெரிதல்.

ஐங்கரனைக்கண்டுநகைத்தாவணிநாலாந்திதியிற்
றிங்கள்பகையானான்சிவசிவா—வெங்கும்
பகையென்னும்பண்பிலதனையொருவ
னகையேயும்வேண்டற்பாற்றன்று. (௮௮)

நந்திகலம்பகத்தான்மாண்டகதைநாடறியுஞ்
சுந்தரஞ்சேர்தென்குளத்தூர்ச்சோமேசா—சந்ததமும்
வில்லேருழவர்பகைகொளினுங்கொள்ளற்க
சொல்லேருழவர்பகை. (௮௮)

உட்பகை.

வென்றிபுனைசம்பரனைவென்றதவனில்லிருந்து
தென்றலெனுந்தேரான்சிவசிவா—வென்று
மரம்பொருதபொன்போலத்தேயுமுரம்பொரு
துட்பகையுற்றகுடி. (௮௯)

மாற்றார்முடியும்வளமையுங்கொண்டேகலந்
தோற்றான்வழுதிமகன்சோமேசா—வாற்றலிலா
எட்பகவன்னசிறுமைத்தேயாயினு
முட்பகையுள்ளதாங்கேடு. (௮௯)

பெரியாரைப்பிழையாமை.

வந்தமுனிவோனைவணங்காவரமுனியைச்
சிந்தைசெயல்வேண்டுஞ்சிவசிவா—முந்தும்
பெரியாரைப்பேணாதொழுகிற்பெரியாராற்
பேராவிடும்பைதரும். (௯௦)

கொன்படைகணீருகக்கோசிகனார்சாபத்தாற்
றுன்பமுற்றார்நால்வேந்தர்சோமேசா—வின்புதவும்
ஏந்தியகொள்கையார்சீறினிடைமுரிந்து
வேந்தனும்வேந்துகெடும். (௯௦)

பெண்வழிச்சேறல்.

ஓதுகனிபொருந்துமுங்கண்மனத்தினுற்ற
சேதிசொலினென்றான்சிவசிவா—வாதலினா
வில்லாள்கட்டாழ்ந்தவியல்பின்மையெஞ்ஞான்று
நல்லாருணாணுத்தரும். (௧௧)

கற்பின்மையில்லாள்பாற்கண்டுமையனுற்றழிந்தான்
சொற்புண்டரீகாக்கன்சோமேசா—பொற்பெண்ணி
இல்லாள்கட்டாழ்ந்தவியல்பின்மையெஞ்ஞான்று
நல்லாருணாணுத்தரும். (௯௧)

வரைவின்மகளிர்.

போசனுரைக்கிசைந்தபுண்ணியனைவேசைகொன்றா
டேசமறியாதோசிவசிவா—பேசு ிடத்
தன்பின்விழையார்பொருள்விழையுமாய்தொடியா
ரின்சொலிழுக்குத்தரும். (௪௨)

வேண்டுமுருப்பசியைப்பார்த்தன்வெறுத்தனனே
தாண்டுமறைப்பரியாய்சோமேசா—யாண்டும்
பொதுநலத்தார்புன்னலந்தோயார்மதிநலத்தின்
மாண்டவறிவினவர். (௪௨)

கள்ளுண்ணாமை.

சுக்கிரனார்சாபத்தொடர்பறிந்தோர்கள்ளிருந்த
திக்கினடப்பாரோசிவசிவா—மக்களென்பார்
கள்ளுண்ணாப்போழ்திற்களித்தானைக்காணுங்கா
லுள்ளான்கொலுண்டதன்சோர்வு. (௪௫)

தக்கன்பான்ஞானத்ததீசியுபதேசமெல்லாந்
தொக்கதனாலானதென்னேசோமேசா—மிக்குக்
களித்தானைக்காரணங்காட்டுதல்கீழ்நீர்க்
குளித்தானைத்தீத்துரீஇயற்று. (௯௫)

சூது.

வெற்றிகளன்சூதாடிவீடுவிட்டுக்காடுறைந்தான்
சிற்றிடையுந்தானுஞ்சிவசிவா—சுற்று
முடைசெல்வமுமொளிகல்வியென்றைந்து
மடையாவாமாயங்கொளின். (௪௭)

முற்றணையத்தாற்பின்னுமூண்டிழந்தார்சூதரொடு
சொற்படுஞ்சூதாடினோர்சோமேசா—வற்பமாம்
ஒன்றெய்திநூறிழக்குஞ்சூதர்க்குமுண்டாங்கொ
னன்றெய்திவாழ்வதோராறு. (௪௮)

மருந்து.

மாதவருண்மாமருதின்மங்கையர்க்குமுற்பிறப்பின
சேதிதெரிவிக்குஞ்சிவசிவா—வாதலினுன்
மாறுபாடில்லாதவுண்டிமறுத்துண்ணி
னூறுபாடில்லையுயிர்க்கு. (௪௯)

நல்லதிலகவதிபார்மொழியைநம்பிவெந்நோய்
சொல்லரசர்தீர்த்துய்ந்தாசோமேசா—புல்லிய
நோய்நாடிநோய்முதனாடியதுதணிக்கும்
வாய்நாடிவாய்ப்பச்செயல். (௫௦)

குடிமை.

தந்தைவதுவைதவிராதுவீடுமன்போய்ச்
சிந்தைதெளிவித்தானசிவசிவா—நந்தா
நலம்வேண்டினாணுடைமைவேண்டுங்குலம்வேண்டின
வேண்டுகயார்க்குமபணிவு. (௫௧)

மங்கலியம்விற்றும்வழாதுபணிசெய்துவந்தார்
துங்கமறைதேர்கலயர்சோமேசா—வங்கண்
வழங்குவதுள்வீழ்ந்தக்கண்ணும்பழங்குடி
பண்பிற்றலைப்பிரிதலின்று. (௫௨)

மானம்.

அன்றெருவைவேந்தனரிவைதனக்காவமர்க்குச்
சென்றுயிரையீந்தான்சிவசிவா—துன்று
மயிர்நீப்பின்வாழாக்கவரிமாவன்னா
ருயிர்நீப்பர்மானம்வரின். (௧௭)

அச்சுவத்தமாப்பட்டானென்னவமர்துறந்தான்
றுச்சிறுரோணனென்பான்சோமேசா—நச்சு
மயிர்நீப்பின்வாழாக்கவரிமாவன்னா
ருயிர்நீப்பர்மானம்வரின். (௧௭)

பெருமை.

நல்லூழிநான்குமனுநாரியுடனண்ணவரி
செல்வமகவானுஞ்சிவசிவா—சொல்லும்
பெருமையுடையவராற்றுவாராற்றி
னருமையுடையசெயல். (௧௨)

தண்டியடிகளிருதாளிணைபேணாதழிந்தார்
தொண்டராம்பேய்ச்சமணர்சோமேசா—மிண்டுஞ்
சிறியாருணர்ச்சியுளில்லைப்பெரியாரைப்
பேணிக்கொள்வேமென்னுநோக்கு. (௧௨)

சான்றாண்மை.

தாருவனமுனிவர்தம்பிழைநோக்காதருளே
சேரநடஞ்செய்தான்சிவசிவா—வோருமவர்
இன்னாசெய்தார்க்குமினியவேசெய்யாக்கா
லென்னபயத்ததோசால்பு. (௧௧)

வன்மைச்சுயோதனற்கும்வானோர்சிறைமீட்டான்
றென்மைநெறிதருமன்சோமேசா—பன்முறையும்
இன்னாசெய்தார்க்குமினியவேசெய்யாக்கா
லென்னபயத்ததோசால்பு. (௧௧)

பண்புடைமை.

பார்தட்பகைமுயலைப்பற்றுதலாலென்றுமதி
தேர்ந்துமதைநீக்கான்சிவசிவா—கூர்ந்த
வரம்போலுங்கூர்மையரேனுமரம்போல்வர்
மக்கட்பண்பில்லாதவர். (௯௯௭)

உன்பணிக்கென்றேதிரட்டுசெல்வமுத்தியுறத்
துன்பமுற்றான்நால்வணிகர்சோமேசா—வன்புமிகும்
பண்பிலான்பெற்றபெருஞ்செல்வநன்பால்
கலந்தீமையாற்றிரிந்தற்று. (௧௦௦௦)

நன்றியில்செல்வம்.

நல்விசயன்கண்ணன்வரநன்மைபுரியாமறையோன்
செல்வமிருந்தென்னாஞ்சிவசிவா—தொல்லுலகி
னச்சப்படாதவன்செல்வநடூரு
ணச்சுமரம்பழுத்தற்று. (௧௦௦௮)

எல்லாமறையவர்க்கீந்தேவறியன்போலானான்
சொல்லாருங்கீர்த்திரகுச்சோமேசா—நல்லதே
சீருடைச்செல்வர்சிறுதுனிமாரி
வறங்கூர்ந்தனையதுடைத்து. (௧௦௧௦)

நாணுடைமை.

சாரும்பதியிலநாய்த்தாருவனமாதர்தமைச்
சேரவிறைசென்றான்சிவசிவா—பாரின்மிசை
நாணகத்தில்லாரியக்கமரப்பாவை
நாணாலுயிர்மருட்டியற்று. (௧௦௨௦)

புண்ணேறுயிர்வாழநாணியுயிர்போக்கினான்
றுண்ணெனவேவாலிமுனஞ்சோமேசா—வெண்ணியிடில்
நாணாலுயிரைத்துறப்பருயிர்ப்பொருட்டா
னாண்டுறவார்நாணாள்பவர். (௧௦௨௦)

குடிசெயல்வகை.

துய்யபகீரதனுந்தொல்லரசரல்லலறச்
செய்தவமென்சொல்வாஞ்சிவசிவா—வையமதி
னல்லாண்மையென்பதொருவற்குத்தான்பிறந்த
வில்லாண்மையாக்கிக்கொளல். (௧௦௫)

மற்றிருதராட்டிரன்சந்தானமெலாமாய்ந்ததே
சுற்றுசீர்த்தென்குளத்தூர்ச்சோமேசா—பற்றும்
இடுக்கண்கால்கொன்றிடவீழுமடுத்தூன்று
நல்லாளிலாதகுடி. (௧௦௬)

உழவு.

வள்ளிபுனங்காத்திருந்தவாறேதுவான்பயிர்செய்
தெள்ளிமையாலன்றோசிவசிவா—வுள்ளுமிடத்
தேரினுநன்றாலெருவிடுதல்கட்டபி
னீரினுநன்றதன்காப்பு. (௧௦௭)

வேள்வித்தொழிற்குமுழுதொழின்முன்வேண்டுமால்
சூழிருழ்தென்குளத்தூர்ச்சோமேசா—வாழும்
உழவினார்கைம்மடங்கினில்லைவிழைவதூஉம்
விட்டேமென்பார்க்குநிலை. (௧௦௮)

நல்குரவு.

மாமணியாற்கோசிகன்போய்மன்விடந்திரான்வறுமைத்
தீமையினான்மீண்டான்சிவசிவா—வாமு
னறன்சாராநல்குரவீன்றதாயானும்
பிறன்போலநோக்கப்படும். (௧௦௯)

நற்றருமன்வெற்றியினைநாடிவிராடனெதிர்
சொற்றமொழிசோர்ந்ததேசோமேசா—கற்றறிவால்
நற்பொருணன்குணர்ந்துசொல்லினுநல்கூர்ந்தார்
சொற்பொருள்சோர்வுபடும். (௧௧௦)

இரவு.

தருமகுணமாவலிபாற்றனமெனச்சேர்த்தான்
றிருமகிணன்றன்சிவசிவா—பரிவி
னிரத்தலுமீதலேபோலுங்கரத்தல்
கனவிலுந்தேற்றுதார்மாட்டு. (௧௦௬)

கஞ்சாறர்சோபனப்பெண்கூந்தல்கடிதளிக்கத்
துஞ்சுமகிழ்ச்சிகொண்டாய்சோமேசா—நெஞ்சின்
இகழ்ந்தெள்ளாதீவாரைக்காணின்மகிழ்ந்துள்ள
முள்ளுளுவப்பதுடைத்து. (௧௦௬)

இரவச்சம்.

ஒன்றுதவவேடமுடன்சராசந்தன்முனஞ்
சென்றிரந்தார்மன்னர்சிவசிவா—வென்றுங்
கரவாதுவந்தியுங்கண்ணன்னார்கண்ணு
மிரவாமைகோடியுறும். (௧௦௭)

எண்ணெயிரப்பஞ்சியுடலேவருத்தித்தீபமிட்டார்
துண்ணென்கணம்புல்லர்சோமேசா—கண்ணியிடில்
ஆவிற்குநீரென்றிரப்பினுநாவிற்
கிரவினிளிவந்ததில். (௧௦௭)

கயமை.

வாரிவழிதாராவருணனடைக்கலமாய்ச்
சேரவழிசெய்தான்சிவசிவா—வாருமிதஞ்
சொல்லப்பயன்படுவர்சான்றோர்கரும்புபோற்
கொல்லப்பயன்படுங்கீழ். (௧௦௮)

எற்றதுரோணனையன்றெள்ளித்துருபதன்பின்
றேற்றுவிசயற்களித்தான்சோமேசா—போற்றிடினும்
ஈர்ங்கைவிதிரார்கயவர்கொடிறுடைக்குங்
கூன்கையரல்லாதவர்க்கு. (௧௦௮)

தலைவியணங்குறுத்தல்.

ஆர்ந்தசுரராஞரமுதணங்கைக்கண்டுமகிழ்
சேர்ந்தசுரராஞர்சிவசிவா—சார்ந்துதனை
யுண்டார்கணல்லதடுநறாக்காமம்போற்
கண்டார்மகிழ்செய்தலின்று. (க0௧)

வாய்ந்ததமயந்தியுருமாணலங்கண்டின்புற்றான்
றேய்ந்தபுகழாளநளன்சோமேசா—வாய்ந்துரைக்கின்
உண்டார்கணல்லதடுநறாக்காமம்போற்
கண்டார்மகிழ்செய்தலின்று. (க0௧

குறிப்பறிதல்.

பைந்தொடியுஞ்சுந்தரரும்பார்த்தகுறிப்பாலன்றே
சிந்தையுமொன்றானர்சிவசிவா—தந்தமது
கண்ணொடுகண்ணிணைநோக்கொக்கின்வாய்ச்சொற்க
ளென்னபயனுமில. (கக0)

காங்கேயன்வேண்டவெறுத்துரைத்தாள்கானவர்மின்
றாங்காவளக்குளத்தூர்ச்சோமேசா—வாங்கண்
உறாஅதவர்போற்சொலினுஞ்செறாஅர்சொ
லொல்லையுணரப்படும். (கக0)

புணர்ச்சிமகிழ்தல்.

பார்த்தன்சுபத்திரைதன்பார்வையினன்மெய்வெதுப்புந்
தீர்த்தனைக்கொண்டான்சிவசிவா—மாத்திரைநா
நீங்கிற்றெறூங்குறுகுங்காற்றண்ணென்னுந்
தீயாண்டுப்பெற்றாளிவள். (ககக)

மெய்த்தவத்தைக்காசிபனும்விட்டொழிந்துமாயைபாற்
சுத்தமனம்வைத்தானேசோமேசா—வித்தலத்தில்
தாம்வீழ்வார்மென்றோட்டுயிலினிதுகொ
றாமரைக்கண்ணானுலகு. (ககக)

நலம்புனைந்துரைத்தல்.

நந்துசிமுகத்தைநாண்மதியென்றேகுடன்
சிந்தைமகிழ்கொண்டான்சிவசிவா—முந்து
மறுவாய்நிறைந்தவவிர்மதிக்குப்போல
மறுவுண்டோமாதர்முகத்து. (கக௨)

என்றூன்றிலோத்தமையையிச்சிக்கிலாங்கவண்மெய்
தோன்றுமெழிலென்சொல்வேன்சோமேசா—வான்ற
முறிமேனிமுத்தமுறுவல்வெறிநாற்றம்
வேலுண்கண்வேய்த்தோளவட்கு. (கக௨)

காதற்சிறப்புரைத்தல.

காதற்குணம்விருத்தகாசிவிபசித்துரைத்த
சேதித்திறமேசிவசிவா—நீதிச்சொ
லுள்ளுவன்மன்யான்மறப்பின்மறப்பறியே
னொள்ளமர்க்கண்ணாள்குணம். (கசங)

கானடந்துஞ்சீதைகலப்பாற்களித்தான்பின்னயர்ந்தான்
றாநீரயோத்தியர்கோன்சோமேசா—வானதனால்
வாழ்தலுயிர்க்கன்னளாயிழைசாத
லதற்கன்னணீங்குமிடத்து. (கககூ)

நாணுத்துறவுரைத்தல்.

சேரவிரைந்துவந்துஞ்சீதையிராமனுளந்
தேரவிருந்தாள்சிவசிவா—பாரிற்
கடலன்னகாமமுழந்துமடலேறாப்
பெண்ணிற்பெருந்தக்கதில். (கக௪)

காமமிகவுழக்துந்தூதைக்கடிந்துவிட்டாள்
சோமநுதற்பரவைசோமேசா—வாமே
கடலன்னகாமமுழந்துமடலேறாப்
பெண்ணிற்பெருந்தக்கதில். (கக௪)

அலரறிவுறுத்தல்.

இந்துநுதன்மாயைவிடகெண்ணிவிலாசிசொலச்
சிந்தைமகிழ்கொண்டாள்சிவசிவா—புந்தி
களித்தொறூஉங்கள்ளுண்டல்வேட்டற்றாற்காமம்
வெளிப்படுந்தோறுமினிது. (௧௧௫)

ஓர்நாளகலிகையைவேட்டின்றும்பரிறை
சோராப்பழிபூண்டான்சோமேசா—வாராயிற்
கண்டதுமன்னுமொருநாளலர்மன்னுந்
திங்களைப்பாம்புகொண்டற்று. (௧௧௬)

பிரிவாற்றாமை.

கோதைவரிவிற்றுடக்கைக்கொண்டல்பிரிவாற்றாமற்
சீதைவனம்போனாள்சிவசிவா—வோதுமிடத்
தின்னாதினனில்லூர்வாழ்தலதனினு
மின்னாதினியார்ப்பிரிவு. (௧௧௬)

வாழ்விழந்தவின்னலினும்வாசவர்கோன்மிக்குநொந்தா
னாழ்சசியைமுன்பிரிந்துசோமேசா—வீழ்வாகட்
கின்னாதினனில்லூர்வாழ்தலதனினு
மின்னாதினியார்ப்பிரிவு. (௧௧௬)

படர்மெலிந்திரங்கல.

மாறனொருநாட்பிரிவின்மங்கையர்கணிடிரவைச்
சீறியுரைசெய்தார்சிவசிவா—கூறிக்
கொடியார்கொடுமையிற்றாங்கொடியவிந்நா
ணெடியகழியுமிரா. (௧௧௭)

இன்படுற்றான்மாயைதோடோய்ந்துபின்னெண்மடங்கு
துன்பமுற்றான்காசிபன்றான்சோமேசா—வன்புடையாக்
கின்பங்கடன்மற்றுக்காமமஃதடுங்காற
றுன்பமதனிற்பெரிது. (௧௧௭)

கண்விதுப்பழிதல்.

நாடரியகண்ணோநளனைவிழித்தகற்றித்
தேடியழுமெலென்னேசிவசிவா—வோடிக்
கதுமெனத்தாமேநோக்கித்தாமேகலுழு
மிதுநகத்தக்கதுடைத்து. (ககஎ)

தாதையன்றித்தானேதுச்சந்தனைச்சேர்ந்தின்னலுற்றாள்
சூதில்சகுந்தலைதான்சோமேசா—வோதிற்
கதுமெனத்தாநோக்கித்தாமேகலுழு
மிதுநகத்தக்கதுடைத்து. (ககஅ)

பசப்புறுபருவரல்.

மாரன்மகன்மஞ்சமுடன்வாராமுன்வாணன்மகள்
சேருநினைவாலேசிவசிவா—சார்வாற்
பசந்தாளிவளென்பதல்லாலிவளைத்
துறந்தாரவரென்பாரில். (ககக)

கேழ்வரைச்சேடியர்சொல்கீழ்மைக்கியற்படுஞ்சொற்
சூழ்டமின்றூர்துன்பத்துஞ்சோமேசா—தாழ்வில்
பசப்பெனப்பேர்பெறுதனன்றேநயப்பித்தார்
நல்காமைதூற்றாரெனின். (ககக)

தனிப்படர்மிகுதி.

முல்லைமடவார்கண்ணுமுன்னின்றொருமொழியாற்
செல்லறவிரென்றார்சிவசிவா—சொல்வி
னசைஇயார்நல்காரெனினுமவர்மாட்
டிசையுமினியசெவிக்கு. (கஉ0)

பன்முநிவர்பன்னியர்கள்பண்டுன்னைக்காமுறவுந்
துன்னியருள்செய்திலையேசோமேசா—வன்னதே
நாங்காதல்கொண்டார்நமக்கெவன்செய்பவோ
தாங்காதல்கொள்ளாக்கடை. (கஉ0)

நினைந்தவர்புலம்பல்.

சந்தனுவுங்கங்கைதனைப்படத்திலேயெழுதிச்
சிந்தையலமந்தான்சிவசிவா—தந்தமனத்
துள்ளினுந்தீராப்பெருமகிழ்செய்தலாற்
கள்ளினுங்காமமினிது. (கஉக)

தன்னையேயுன்னுந்தமயந்திமாதைநளன்
றுன்னார்போனீத்திருந்தான்சோமேசா—வன்னதே
தந்நெஞ்சத்தெம்மைக்கடிகொண்டார்நாணூர்கொ
லெந்நெஞ்சத்தோவாவரல். (கஉக)

கனவுநிலையுரைத்தல.

நித்திரையிலுற்றுணைந்தானேயணிரத்நவல்லி
சித்திரரேகைக்குச்சிவசிவா—வொத்துரைக்கத்
துஞ்சுங்காற்றேண்மேலராகிவிழிக்குங்கா
னெஞ்சத்தாராவர்விரைந்து. (கஉஉ)

அல்லமனைமாயைகனவிலணைந்ததனாற்
சொல்லரியவின்பமுற்றாள்சோமேசா—நல்ல
நனவினாற்கண்டதூஉமாங்கேகனவுந்தான்
கண்டபொழுதேயினிது. (கஉஉ)

பொழுதுகண்டிரங்கல.

வாடிக்கணவனுறாவல்லிரவிற்பிங்கலையுந்
தேடிமனநொந்தாள்சிவசிவா—வோடிப்
பொருண்மாலையாளரையுள்ளிமருண்மாலை
மாயுமென்மாயாவுயிர். (கஉங)

வானவர்கோன்காமநோய்மாலைவரமிக்கதே
தூநீர்ப்புளினத்திற்சோமேசா—வானதே
காலையரும்பிப்பகலெல்லாய்போதாகி
மாலைமலருமிந்நோய். (கஉங)

உறுப்புநலனழிதல்.

வைதாள்விசயன்மருவாதுருப்பசியென்
செய்வாளயர்ந்தாள்சிவசிவா—மெய்யாக்
கொடியார்கொடுமையுரைக்குந்தொடியொடு
தொல்கவின்வாடியதோள். (கஉ௩)

ஓதாநாளோதுகலையொத்திளைத்தாள்சீதையென்றூன்
சூதாராவான்மீகிசோமேசா—கோதில்
பணைநீங்கிப்பைந்தொடிசோருந்துணைநீங்கித்
தொல்கவின்வாடியதோள். (கஉ௩)

நெஞ்சொடுகிளத்தல்.

வண்ணவுருக்குமணிமாயன்மணம்புணர்த
திண்ணமெனவுற்றாள்சிவசிவா—வுண்ணினைவிற்
செற்றாரெனக்கைவிடலுண்டோநெஞ்சேயா
முற்றாலுறாஅதவர். (கஉ௫)

அன்பன்றுறப்பவுநாளாயினிதேடித்
துன்பந்தலைக்கொண்டாள்சோமேசா—முன்பே
இருந்துள்ளியென்பரிதனெஞ்சேபரிந்துள்ளல்
பைதனோய்செய்தார்கணில். (கஉ௫)

நிறையழிதல.

அன்றுவனத்தண்ணலருகேநிறையழிந்தார்
சென்றுமுனிமார்சிவசிவா—வொன்ற
நிணந்தியிலிட்டன்னநெஞ்சினார்க்குண்டோ
புணர்ந்தூடிநிற்பேமெனல். (கஉசா)

கோற்றொடிவிற்பாய்போன்றுகூடல்வணிகமின்னார்
தோற்றுநிறையழித்தாய்சோமேசா—சாற்றுங்காற்
பன்மாயக்கள்வன்பணிமொழியன்றோநம்
பெண்மையுடைக்கும்படை. (கஉசா)

அவர்வயின்விதும்பல்.

மன்னுமுன்கேளென்னவுஞ்சீமந்தனிதேரூடலுளஞ்
சின்னமுறலென்னேசிவசிவா—வுன்னி
லொருநாளேழுநாள்போற்செல்லுஞ்சேட்சென்றார்
வருநாள்வைத்தேங்குபவர்க்கு. (கஉஎ)

சந்திரசேனன்வரவுநோக்கியுயிர்தாங்கினளாற்
சுந்தரச்சீமந்தினிதான்சோமேசா—முந்தும்
உரனசைஇயுள்ளந்துணையாகச்சென்றார்
வரனசைஇயின்னுமுளேன். (கஉஎ)

குறிப்பறிவுறுத்தல்

குன்றிற்சுமதிகுறிப்பாற்றருபகுத்தன்
சென்றுமயல்கொண்டான்சிவசிவா—வென்று
முகைமொக்குளுள்ளதுநாற்றம்போற்பேதை
நகைமொக்குளுள்ளதொன்றுண்டு. (கஉஅ)

சங்கிலிபாலாரூரரூழிகணந்தானுகத்
துங்கமிகுமன்புவைத்தார்சோமேசா—பொங்கப்
பெரிதாற்றிப்பெட்பக்கலத்தலரிதாற்றி
யன்பின்மைசூழ்வதுடைத்து. (கஉஅ)

புணர்ச்சிவிதும்பல்

மன்னனகலியைநிவஞ்சனைநீங்காமலுடற்
சின்னமுறலென்னேசிவசிவா—வென்னவவற்
காணுங்காற்காணேன்றவறாயகாணுக்காற்
காணேன்றவறல்லவை. (கஉகூ)

யோசனைகந்தியினைக்காண்டலும்பேரோகைகொண்டான்
றாசனையாச்சந்தனுத்தான்சோமேசா—நேசமுடன்
உள்ளக்களித்தலுங்காணமகிழ்தலுங்
கள்ளுக்கில்காமத்திற்குண்டு. (கஉகூ)